Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 279 | உள்ளூர் - 07.10.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 279 | வெளியூர் - 08.10.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**தசாபுத்தி கணிப்பின் திறவுகோல்?** | **கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!** | **அரசியல் களத்தில் தனுஷ்...!** | **தமிழக அமைச்சரவையில் மாற்றமா?**

# விநாயகர் கோயிலில் மோடி வழிபாடு!

புதுடில்லி, அக். 07–

மக்கள் சேவையில் 25 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி டில்லி ஸ்ரீ விநாயகர் கோயிலில் வழிபாடு நடத்தினார். இதுகுறித்து சமூக வலைதளத்தில் புகைப்படத்தைப் பகிர்ந்த அவர், நாட்டு மக்களின் மகிழ்ச்சி, வளம் மற்றும் நல்வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்ததாகத் தெரிவித்தார். இறை யருளால் அனைவருக்கும் நல்வாழ்வு கிடைக்கவும், நாடு முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து பயணிக்கவும் வேண்டியதாகக் குறிப்பிட்டார். மோடியின் 25 ஆண்டுகால பொதுச்சே வையைப் பாராட்டி துணை ஜனாதிபதி மற்றும் மத்திய அமைச்சர்கள் சமூக வலைதளங்களில் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.



# 25 ஆண்டுகள் தொடரும் மோடியின் தலைமை!

புதுடில்லி, அக். 07–

முதல்வர் முதல் பிரதமர் வரை தொடர்ந்து 25 ஆண்டுகள் அரசின் தலைவராகப் பணியாற்றியுள்ள நரேந்திர மோடியின் சேவை மனப்பான்மையையும் தலைமைப் பண்புகளையும் ஸ்ரீ ராமச்சந்திர மிஷன் தலைவர் கமலேஷ் படேல் பாராட்டியுள்ளார். மோடி ஆன்மிகப் பக்குவமும் தீர்க்கமான தலைமைத்துவமும் கொண்டவர் என்றும், சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு சேவையை வாழ்நாள் இலக்காகக் கொண்டவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். 1979 மோர்பி அணை விபத்தின்போது மீட்புப் பணியில் ஈடுபட்டதாகவும், 1990 ரயில் பயணத்தில் இருக்கையின்றித் தவித்த இரு பெண் அதிகாரிகளுக்காக மோடியும் சங்கர்சிங் வகேலாவும் தங்களது படுக்கைகளை விட்டுக்கொடுத்ததாகவும் படேல் குறிப்பிட்டுள்ளார்.



2001 நிலநடுக்கத்திற்குப் பிந்தைய சவாலான சூழலில் குஜராத் முதல்வராகப் பொறுப்பேற்ற மோடி, விமர்சனங்களைக் கடந்து திறமையான நிர்வாகியாக உருவெடுத்ததாகவும் அவர் பாராட்டியுள்ளார்.

# மத்திய அமைச்சரவையில் விரைவில் மாற்றம்..!

புதுடெல்லி, அக். 07–

இம்மாத இறுதிக்குள் மத்திய அமைச்சரவையை மாற்றியமைக்க பிரதமர் மோடி முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்காக நவராத்திரியையொட்டி சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டவும் பிரதமர் மோடி திட்டமிட்டிருப்பதாக தெரியவந்துள்ளது. மந்திய அமைச்சரவையில் அதிகபட்சம் 81 பேர் இடம் பெறமுடியும். தற்போது 68 பேர்மட்டுமே உள்ளார்கள்.



2014இல் முதல் முதலில் மோடி பிரதமரானது முதல் தற்போது வரை அவர் அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டதில்லை.

ஆனால் அண்மை காலமாக மத்திய அரசுக்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடந்து வரும் சூழலில் அதை பாஜக தீவிரமாக எடுத்துக்கொண்டுள்ளது.

குறிப்பாக கடந்த ஜூன் – ஜூலையில் நீட் உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளால் நாடு முழுவதும் வெடித்த இளைஞர் போராட்டத்தால் மத்திய கல்வி அமைச்சர் பதவியில் இருந்து தர்மேந்திர பிரதான் அழுத்தத்தின் மத்தியில் தாமாக விலகினார்.

தற்போது எஸ்ஐஆர் மற்றும் தேர்தல் மோசடி குற்றச்சாட்டுகளில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக போராட்டம் வலுத்து வருகிறது. இந்த அசாதாரண சூழல்களால் பாஜக தடுமாற்றம் கொண்டுள்ள சூழலில் மூத்த தலைவர்களுக்கு பதில் புது முகங்களை முன்னிறுத்தி இளைஞர்களை கவர தீவிர முயற்சி நடந்து வருகிறது. உத்தரப் பிரதேச மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தலில் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி உள்ளிட்டோருக்கு எம்பி சீட் மறுக்கப்பட்டு புது முகங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது இதன் ஒரு பகுதியாக கருதப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் சென்னை, மாதவரத்தில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆவின் மாநில மத்திய ஆய்வகத்தின் துணைக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது பால் மற்றும் பால்வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. விஜயலக்ஷ்மி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம். எல். விஜய் பிரபு, என். செந்தில் குமார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் வி.சிவா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் அனு ஜார்ஜ், பால்வளத்துறை இயக்குநர் மற்றும் ஆவின் மேலாண்மை இயக்குநர் சு. சிவராசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரெப்போ வட்டி உயர்வு!

# 5.50% ஆனது விகிதம்! வீடு, கார் கடன் வட்டி உயருமா?

## தவணையில் கூடுதல் சுமை?

புதுடெல்லி, அக். 07–

ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் நடைபெற்ற அக்டோபர் மாத நாணயக் கொள்கைக் கூட்டத்திற்குப் பிறகு இந்த முடிவு அறிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.




கூட்டத்தில் பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி, ரூபாயின் மதிப்பு, அந்நியச் செலாவணி கையிருப்பு உள்ளிட்ட அம்சங்கள் விவாதிக்கப்பட்டன. ஈரான் போரால் ஏற்பட்ட எரிபொருள் விநியோகச் சிக்கல்கள், பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவை முக்கியமாகப் பரிசீலிக்கப்பட்டதாகச் செய்தி குறிப்பிடுகிறது.

ரெப்போ என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகியகாலக் கடன்களுக்கான வட்டி விகிதமாகும். இதன் உயர்வு, ரெப்போவுடன் இணைக்கப்பட்ட மாறும் வட்டிக் கடன்களின் செலவை அதிகரிக்கக்கூடும். வீட்டுக் கடன் உள்ளிட்டவற்றில் ஒப்பந்த விதிமுறைகளைப் பொறுத்து மாதத் தவணையோ, திருப்பிச் செலுத்தும் காலமோ உயரலாம்.

வாகன, தனிநபர் மற்றும் நகைக் கடன்களின் வட்டி மாற்றம், அவற்றின் வட்டி வகை மற்றும் வங்கிகளின் முடிவைப் பொறுத்து அமையும். ஏற்கெனவே நிலையான வட்டியில் பெறப்பட்ட கடன்களின் தவணை தானாக உயராது.

பண்டிகைக் காலச் செலவுகளுக்கு மத்தியில், கடன் செலவு அதிகரிப்பது குடும்ப வரவுசெலவுத் திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம். கடனாளிகள் தங்களுக்குப் பொருந்தும் மாற்றங்களை வங்கியிடம் உறுதிப்படுத்திக்கொள்வது அவசியம்.

# சவுதிக்கு ராணுவ படைகளை அனுப்ப பாகிஸ்தான், துருக்கி முடிவு: ரியாத்தில் நடந்த அவசர கூட்டத்தில் தீர்மானம்...!

வாஷிங்டன், அக். 07–

சவுதி அரேபியாவிற்கு மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், தங்களது ராணுவ படைகளை விரைவாக அனுப்ப உள்ளதாக பாகிஸ்தானும், துருக்கியும் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான், சவுதி அரேபியா மற்றும் துருக்கி ஆகிய மூன்று நாடுகள் கடந்த ஆகஸ்ட் 7 அன்று மெக்கா கூட்டு பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், மூன்று உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அது மற்ற உறுப்பு நாடுகளின் மீதான தாக்குதலாக கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏமனில் உள்ள பாப்–அல்–மண்டேப் ஜலசந்தியை கைப்பற்றும் நோக்கில், போரில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஏமனுக்கு ஆதரவாக சவுதி அரேபியாவும் ஹவுதிகள் மீது தனது தாக்குதலை நடத்தி வருகிறது. இதையடுத்து சவுதியின் புனித நகரங்களான மெக்கா மற்றும் மதினா மீது ஹவுதிகள் தாக்குதலை நடத்தினர்.

ஹவுதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்திற்கு பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் தங்களது கண்டனத்தை தெரிவித்தன.

இந்தநிலையில் ஹவுதிகள் மீது தாக்குதல் நடத்துவது குறித்து மூன்று நாடுகளை சேர்ந்த ராணுவ தளபதிகளும் கடந்த மாதம் 25–ந்தேதி ரியாத்தில் ஆலோசனை கூட்டம் நடத்தினர்.

இதைத்தொடர்ந்து ரியாத்தில் அக்டோபர் 5–ந்தேதி அன்று மெக்கா பாதுகாப்பு கூட்டணியின் வியூக அரசியல் மற்றும் பாதுகாப்பு குழுவின் அவரச கூட்டம் நடைபெற்றது.

இந்த உயர்மட்ட கூட்டத்தில் மூன்று நாடுகளின் மூத்த பாதுகாப்பு மற்றும் ராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டனர். துருக்கியின் வெளியுறவு அமைச்சர் ஹக்கான் ஃபிடான், பாதுகாப்பு அமைச்சர் யாசர் குலர் மற்றும் பொதுப் படைத் தலைவர் ஜெனரல் செல்சுக் பைரக்டரோக்லு ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாகிஸ்தான் சார்பில் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான முகமது இஷாக் தார், பாதுகாப்பு படைகளின் தலைமைத் தளபதியும் ராணுவத் தலைமை தளபதியுமான ஃபீல்ட் மார்ஷல் ஆசிம் முனீர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா முகமது ஆசிஃப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சவூதி அரேபியா சார்பில் வெளியுறவு அமைச்சர் இளவரசர் ஃபைசல் பின் ஃபர்ஹான் அல் சவுத், பாதுகாப்பு அமைச்சர் இளவரசர் காலித் பின் சல்மான் மற்றும் பொதுப் படைத் தலைமை தளபதி ஜெனரல் ஃபயாத் பின் ஹமீத் அல்–ருவைலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

மெக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின் பொது செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் நௌமான் மஹமூத்தும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இதையடுத்து இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறிக்கையாக தற்போது பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தங்கள் நாடுகளின் புதிய பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ், சவுதி அரேபியாவிற்கு ராணுவ படைகள் மூலம் உதவிகளை வழங்க பாகிஸ்தானும், துருக்கியும் ஒப்புக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில், கூட்டு பாதுகாப்பு உறுதிமொழிகளை உடனடியாக நடைமுறைப்படுத்தவும், சவுதி அரேபியாவிற்கு வழங்க ஒப்புக் கொள்ளப்பட்ட ராணுவ படைகளை விரைவாக வழங்கவும் முடிவு எடுக்கப்பட்டுள்ள்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகள் சவுதி அரேபியா, பாகிஸ்தான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் தேசிய சட்டங்களுக்கு இணங்க ராணுவ படைகள் நிலைநிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை ராணுவ தயார் நிலையை வலுப்படுத்தவும், மூன்று நாடுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தி, ஹவுதிகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 07.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 20-ம் தேதி

## போராட்டத்தின் நோக்கம் மக்களா, விளம்பரமா?



ஜனநாயகத்தில் போராட்டம் என்பது மக்களின் குரலை அதிகாரத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் உரிமை. மாணவர் அமைப்புகளோ, புதிதாக உருவான கட்சிகளோ முன்னெடுக்கும் நியாயமான கோரிக்கைகளுக்கு தேசியக் கட்சிகள் ஆதரவு அளிப்பதும் இயல்பான அரசியல் செயல்பாடுதான். ஆனால், அந்தப் பங்கேற்பு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவுகிறதா? அல்லது தலைவர்களின் விளம்பரத்திற்கு மட்டுமே பயன்படுகிறதா? என்ற கேள்வியைத் தவிர்க்க முடியாது.

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையையும், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ராஜினாமா செய்ய வேண்டும் என்ற வலியுறுத்தலையும் முன்வைத்து நடைபெறும் போராட்டங்களில், அரசியல் தலைவர்களின் வருகையைவிட அவற்றுக்கான ஆதாரங்களும் விளக்கங்களுமே முதன்மை பெற வேண்டும். பதவி விலகல் கோரிக்கை கடுமையானது; அதனை நியாயப்படுத்தும் பொறுப்பும் அதற்கேற்ப உயர்ந்தது.

ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பிற அமைப்புகளின் போராட்டங்களில் கலந்துகொள்வதை மட்டும் வைத்து, அது சுயவிளம்பரம் என்று முடிவுசெய்வது பொருத்தமல்ல. அதேவேளையில், அவர்களின் வருகைக்குப் பிறகு கோரிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தலைவர்களின் புகைப்படங்களும் பரபரப்பான காட்சிகளுமே முன்னிலைப்படுத்தப்பட்டால், அந்த அரசியல் அணுகுமுறை விமர்சனத்திற்கு உரியதாகிறது.

நீண்ட வரலாறும் ஆட்சி அனுபவமும் கொண்ட கட்சிகளிடம் மக்கள் எதிர்பார்ப்பது பொறுப்பான வழிநடத்தலைத்தான். குற்றச்சாட்டுகளை ஆராய்வது, உரிய அமைப்புகளிடம் விளக்கம் கோருவது, நாடாளுமன்றத்தில் விவாதிப்பது, சட்டரீதியான வழிகளைப் பயன்படுத்துவது ஆகியவற்றுடன் போராட்டமும் இணைந்திருக்க வேண்டும். தீவிரத்தை அதிகரிப்பதே அரசியல் வலிமையின் அடையாளம் என்ற எண்ணம் ஜனநாயகத்திற்கு உதவாது.

மாணவர்களின் பங்கேற்புள்ள போராட்டங்களில் தலைவர்களின் பொறுப்பு மேலும் அதிகரிக்கிறது. அவர்களின் பாதுகாப்பு, கல்வி மற்றும் எதிர்காலத்தைப் பொருட்படுத்தாமல் மோதலைத் தூண்டும் அணுகுமுறை ஏற்கத்தக்கதல்ல. ஆதரவு அளிக்கும் தலைமை, உணர்ச்சிகளைப் பெருக்குவதுடன் நிற்காமல், தீர்வுக்கான பேச்சுவார்த்தையையும் முன்னெடுக்க வேண்டும்.

ஒரு கட்சியின் வயதும் அளவும் அதன் கோரிக்கையின் நியாயத்தைத் தீர்மானிப்பதில்லை. சிறிய அமைப்பின் குரலிலும் உண்மை இருக்கலாம்; பெரிய கட்சியின் முழக்கத்திலும் ஆதாரக் குறைவு இருக்கலாம். எனவே, அமைப்புகளை இழிவுபடுத்துவதற்குப் பதிலாக, அவற்றின் கோரிக்கைகளையும் செயல்முறைகளையும் மதிப்பிடுவதே உயர்ந்த அரசியல் பண்பாடு. போராட்டம் முடிந்த பிறகு மக்களுக்கு என்ன கிடைத்தது என்பதே அதன் மதிப்பை நிர்ணயிக்கும். விளம்பர வெளிச்சம் தலைவர்கள்மீது விழலாம்; ஆனால் அரசியல் பொறுப்பின் வெளிச்சம் மக்களின் பிரச்சினைகள்மீது நிலைத்திருக்க வேண்டும்.

**மதுரை மணி**
**ஆசிரியர்.**

# சட்டம் ஒழுங்கு சீரழிந்து ரத்த சகதியில் தமிழ்நாடு: மு.க.ஸ்டாலின்!




சென்னை, அக். 07–

சட்டம் ஒழுங்கு சீரழிந்து இரத்தச் சகதியில் சிக்கியுள்ள தமிழ்நாடு என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:–

குற்றவாளிகள் தைரியமாகவும் பொதுமக்கள் அச்சத்தோடும் வாழும் சூழலுக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளதற்கு சான்றாக கடந்த 24 மணி நேரத்தில் வெளியாகிய அதிர்ச்சிச் செய்திகள் அமைந்துள்ளன.

* சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

* திருத்தணியில் தனது 17 வயது மகளுக்குத் தொல்லை கொடுத்த நபர் மீது காவல் நிலையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கிறது.

* சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த ஜனாபாய் எனும் மூதாட்டி பகலிலேயே கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளிகள் அவரது நகைகளை திருடி சென்றுள்ளனர்.

* திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமீன் கையெழுத்து போட்டுவிட்டு திரும்பும் போதே வீரபத்திரன் என்பவர் மர்ம நபர்களால் மனைவி முன்பு வைத்து சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

* மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே மது போதையில் நிர்வாணமாக்கி வாலிபர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

* சோழவந்தானில் டாஸ்மாக் கடை அருகே பைக்கில் வந்த சியாம் சுந்தர்ராஜன் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

* எண்ணூர் இரயில் நிலையத்திலேயே மாணவர்களை வெட்ட முயற்சி நடந்துள்ளது.

வடக்கு, தெற்கு, மேற்கு, தலைநகர் என எல்லா திசைகளிலும் குற்றச் சம்பவங்கள் கொடிகட்டி பறக்கின்றன. பட்டப்பகல், நள்ளிரவு எனப்பாகுபாடு இல்லாமல் தமிழ்நாடு ரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. வீட்டிலும் பாதுகாப்பில்லை, வெளியிலும் பாதுகாப்பில்லை என்ற நிலையில் மக்கள் பரிதவித்துக் கிடக்கின்றனர்.

# மின்வெட்டை சமாளிக்க 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் - டெண்டர்!

சென்னை, அக். 07–

தமிழகத்தில் அதிகரித்து வரும் மின் வெட்டை சமாளிக்க மின்சாரத்தை வெளி சந்தையில் இருந்து கொள்முதல் செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் டெண்டர் வெளியிட்டுள்ளது. 4,500 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய டெண்டர் கோரப்பட்டுள்ளது. வருகிற 12–ம் தேதி முதல் 31–ம் தேதி வரை 4,500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

பீக் ஹவர்ஸ் எனப்படும் பிற்பகல் 6 மணி – நள்ளிரவு 12 மணி வரை தேவையான 3,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட உள்ளது. நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 2 மணி வரை தேவையான 1,500 மெகாவாட் மின்சாரத்தை கொள்முதல் செய்ய டெண்டர் கோரப்பட்டுள்ளது.



# இந்தியா உள்பட 7 நாடுகள் 2036 ஒலிம்பிக்ஸை நடத்த விருப்பம்!

புதுடெல்லி, அக். 07–

இந்தியா, ஜெர்மனி, கத்தார் உள்பட 7 நாடுகள், 2036–ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளதாக, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி (ஐஓசி) செவ்வாய்க்கிழமை தெரிவித்தது. அந்த ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பைப் பெறுவதை இலக்காகக் கொண்டு இந்தியா தீவிரமாகச் செயல்பட்டு வரும் நிலையில், ஐஓசி இதை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐஓசி வெளியிட்ட அறிக்கையில், 'ஜெர்மனி, ஹங்கேரி, இந்தியா, கத்தார், தென் கொரியா, தென்னாப்பிரிக்கா, துருக்கி ஆகிய நாடுகள், 2036–ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளன. அந்தப் போட்டிகளுக்கான தங்களின் திட்டத்தை, ஐஓசி–யின் எதிர்கால ஒலிம்பிக் போட்டிகள் விவகாரத்தை கவனிக்கும் குழுவிடம் நவம்பரில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளோம்.

போட்டிகளை நடத்தும் இடம், வீரர், வீராங்கனைகளின் அனுபவம், போட்டிகளுக்கான நிதித் திட்டம், அரசியல் மற்றும் பொது மக்களின் ஆதரவு, விளையாட்டுகளை வெற்றிகரமாக நடத்துவதற்கான திறன் உள்பட, பல்வேறு காரணிகளின் அடிப்படையில் அந்தத் திட்டங்கள் மதிப்பீடு செய்யப்படும். 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை கோரி, அக்டோபர் 31–ஆம் தேதிக்குப் பிறகு மேற்கொள்ளப்படும் பரிந்துரைகள் ஏற்கப்படாது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குஜராத் மாநிலம், அகமதாபாதில் 2036 ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை கோரி, இந்தியா தனது விருப்பக் கடிதத்தை 2024–ஆம் ஆண்டிலேயே ஐஓசியிடம் அளித்துவிட்டது. இந்த விவகாரம் தொடர்பாக, இந்தியாவின் பேச்சுவார்த்தையில் குஜராத் அரசு, மத்திய விளையாட்டு அமைச்சகம் ஆகியவற்றின் ஆதரவுடன், இந்திய ஒலிம்பிக் சங்கம் ஈடுபட்டுள்ளது.

# மதுரை கள்ளழகர் கோயில் நுழைவு வாயிலில் 'ஹிந்தி'.. தமிழ் மொழி நீக்கமா?




மதுரை, அக். 07–

புகழ்பெற்ற மதுரை கள்ளழகர் கோயி லுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளி லிருந்து மக்கள் வந்து தரிசித்துவிட்டுச் செல்வது வழக்கம். இந்தக் கோயிலின் நுழைவு வாயில் பகுதியில் மிகப் பிரமாண்டமான தோரண வாயில் உள்ளது. இந்த நுழைவு வாயிலில் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் என்று மூன்று மொழிகளிலும் 'அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்' என்று பெயிண்டில் எழுதப்பட்டிருந்தது. தற்போது அந்த பெயிண்டில் இருந்த எழுத்துகளை நீக்கிவிட்டு ஜொலிக்கும் வடிவிலான எழுத்துகள் பொறிக்கப்பட்டு ள்ளன. செவ்வாய்க்கிழமை இரவு மதுரை கள்ளழகர் கோயில் நுழைவு வாயிலில், தமிழ்– ஆங்கிலம்– ஹிந்தியில் கோயிலின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

ஆனால், தற்போது தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்த கோயிலின் பெயர் நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. இந்த விவகா ரத்தை உண்மைத்தன்மையை சரிபா ர்க்காமலும் எதிர்வினைகள் கிளம்பின. இந்த நிலையில், இந்தத் தகவலை தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், மதுரை அழகர் கோயில் நுழைவு வாயிலில் தமிழ் நீக்கம் என்பது பொய் தகவல். வதந்திகளை பரப்பாதீர்கள் என்றும் தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் தெரிவித்துள்ளது.

அவர் இதுகுறித்து வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மதுரை அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் பெயர்ப்பலகையில் இருந்து தமிழ் மொழி நீக்கப்பட்டதாக செய்தி சேனல் வெளியிட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதும், திட்டமிட்டு உருவாக்கப்பட்ட போலியான செய்தி. செய்தியில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படத்தில், பெயர்ப்பலகையில் இடம்பெற்றிருந்த தமிழ் எழுத்துகளை திட்டமிட்டு ஃபோட்டோஷாப் மூலம் மறைத்து, தமிழ் நீக்கப்பட்டதைப் போன்ற ஒரு போலியான புகைப்படத்தை உருவாக்கி, அதனை உண்மையான புகைப்படம் போல சித்தரித்து செய்தி வெளியிட்டுள்ளனர்.



# தசாபுத்தி கணிப்பின் திறவுகோல்?



ஜாதகரின் தற்போதைய பிரச்சினைகள், எதிர்கால நிகழ்வுகளை ஆராய தசாபுத்தி முக்கியமானது எனப் பாரம்பரிய ஜோதிடம் கருதுகிறது. லக்னம் முதல் பன்னிரு பாவங்களின் பொருள், கிரகங்களின் காரகத்துவம், ஆதிபத்தியம், இருப்பிடம், பார்வை, சேர்க்கை ஆகியவற்றை இணைத்தே பலன் கணிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பாவத்துடன் தொடர்புடைய தசாபுத்தியில் சிரமங்களும், சுபத் தொடர்புள்ள அமைப்புகளில் சாதகமான பலன்களும் ஏற்படலாம் என்பது இம்மரபின் விளக்கம்.

மனோகாரகனான சந்திரன் பாதிக்கப்பட்டால் மனநிலை, தாய் சார்ந்த அம்சங்களை ஆராய வேண்டும். அவரைப் பார்க்கும் கிரகங்களின் ஆதிபத்தியமும் காரகத்துவமும் கவனிக்கத்தக்கவை. சந்திரன் பத்தாம் பாவ அதிபதியாக இருந்தால் தொழில் தொடர்பான சிக்கல்களையும், ஐந்தாம் பாவ அதிபதியாக இருந்தால் குழந்தைகள் வழியான மனவருத்தத்தையும் பரிசீலிக்கலாம்.

ஆத்மகாரகனான சூரியன் தன்னம்பிக்கை, வருமானம், தந்தை, கண்கள், அரசு, உயரதிகாரிகள், முதலாளி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறார். அவரது பாதிப்பு இவ்விஷயங்களில் இடையூறுகளைக் குறிக்கலாம். ஆறாம் பாவ அதிபதியாகச் செயல்படும்போது கடன், நோய், எதிரிகள், வழக்குகளுடன் வேலைவாய்ப்பையும் ஆராய வேண்டும். அரசு வேலைக்கான சாத்தியத்தை மதிப்பிட, சூரியன் அமர்ந்த வீட்டின் அதிபதியுடைய வலிமை முக்கியம்; உச்சநிலை சாதகமாகவும் பலவீனம் தடையாகவும் கருதப்படுகிறது.

இயற்கைச் சுபர், பாபர் தொடர்புகளுடன், லக்னம் மற்றும் ராசிக்கு அந்தக் கிரகம் யோகரா, பாபரா என்பதையும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு கிரகமும் நன்மை அல்லது சிரமம் தரும் அமைப்பில் உள்ளதா என்பதை அதன் பாவப் பொறுப்புகளுடன் ஆராய்வது அவசியம். வீடு கொடுத்த கிரகத்தின் நிலையும் பலனை மாற்றக்கூடியதாகக் கருதப்படுகிறது. சனி, ராகு, கேது தொடர்புகளும் இந்த மதிப்பீட்டில் இடம்பெறுகின்றன.

பாதிப்புடைய தசாபுத்தியின் காலத்தையும் அடுத்துவரும் அமைப்பையும் ஆராய்ந்தே நிவாரணக் காலத்தை விளக்க வேண்டும். ஒரு காலம் முடிந்தவுடன் பிரச்சினை தீரும் என்று உறுதியாகக் கூறுவது பொருத்தமல்ல. நிகழ்வுகளை மாற்றும் ஆற்றல் இறைவனுக்கு உண்டு என்பது கட்டுரையின் ஆன்மிக நம்பிக்கை. இவை பாரம்பரிய விளக்கங்களே; உறுதியான நிகழ்வு முன்னறிவிப்புகள் அல்ல.

# மீனாட்சி அம்மன் கோயிலில்: முதியோர், குழந்தையுடன் வருவோருக்கு தனி வரிசை!



மதுரை, அக். 07––

மீனாட்சி கோயில் கும்பாபிஷேகம் செப். 17ல் நடந்தது. செப். 28ல் முதல்வர் விஜய் தரிசனம் செய்தார். அக். 2ல் மண்டல பூஜை முடிந்தது. இதன் காரணமாகவும், பள்ளி காலாண்டு விடுமுறையாலும் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தது. கட்டுக்கடங்காத கூட்டத்தால் கோபுர கதவுகள் திறக்கும் முன்கூட்டியே அடைக்கப்படும் சூழல் ஏற்பட்டது. தற்போது காலாண்டு விடுமுறைக்கு பின் பள்ளிகள் திறக்கப்பட்டதால் கூட்டம் குறைந்து வருகிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ள நிலையில் முதியோர், கைக்குழந்தைகளுடன் வருவோருக்கு அம்மன் சன்னதி கொடிமரத்தில் இருந்து தனி வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு கட்டண தரிசன டிக்கெட் பெற்ற பின், அங்குள்ள கோயில் ஊழியரிடம் கையை உயர்த்தி தெரிவித்து பின் வரிசையில் நிற்காமல் செல்ல முடியும் ஆனால் சித்திரை வீதியில் இருந்து கூட்ட நெரிசலில் சிக்கி பல மணி நேரம் காத்திருந்து அம்மன் சன்னதியை நெருங்கிய பிறகே தனி வரிசை குறித்து தெரிவிக்கிறார்கள் என்று முதியோர்கள் அதிருப்தி அடைகின்றனர்.. முதியோர், குழந்தைகளுக்கான தனி வரிசை அமைத்தபோதும் குடும்பம் குடும்பமாக வருவதால் கூட்டத்தில், பிரிந்து விட கூடாது என சேர்ந்து வரிசையில் செல்ல ஒன்றாக நிற்கின்றனர். தற்போது உள்ள வரிசைகள், அனுமதி விவரம் பற்றி நான்கு வாசலிலும் அது பற்றி அறிவிப்பு பலகை வைத்தால் நல்லது என சுமுக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை
மதுரை
முதியோருக்கு உணவு!
உலக முதியோர் வாரத்தை முன்னிட்டு உணவு வழங்கும் நிகழ்ச்சி





மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் உலக முதியோர் வாரத்தை முன்னிட்டு உணவு வழங்கப்பட்டது. நிறுவனர் மணிகண்டன் முதியோர்களை உற்சாகப்படுத்தும் வகையில் உரையாற்றி உணவு வழங்கினார்.
தமிழியக்கம் பழனிச்சாமி, வானொலி அறிவிப்பாளர் டயானா, சமூக சேவகர்கள் இல.அமுதன், ரமேஷ்குமார், ஜவகர், நித்தீஷ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
முதியோர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தனர்.

# ஸ்டாலின் சார் ரூ.1,000 கோடி செலவு பண்ணாருனு நானும் ஏஐ வீடியோ வெளியிடுகிறேன்... பார்க்கிறீர்களா? - அமைச்சர் ஆதவ் அர்ஜுனா!



சென்னை, அக். 07–

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கிடம் திமுக மாநில அமைப்பு இணைச் செயலர் எஸ்.ஆஸ்டின் எம்எல்ஏ செவ்வாய்க்கிழமை புகார் மனு அளித்தார். அதில், அவர் செலவு செய்ததாக குறிப்பிட்ட தொகை தேர்தல் கணக்கு பதிவேட்டில் பதிவாகவில்லை என்றால் உடனடியாக சத்தியபாமா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் விதிப்படி, குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஒரு வேட்பாளர் செலவு செய்திருக்கிறார் என்றால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும். அது சித்தரிக்கப்பட்ட காணொலி என சத்தியபாமா கூறியிருப்பது நாடகம் என்றார் எஸ்.ஆஸ்டின்.

இந்த நிலையில், ஸ்டாலின் சார் ரூ.1,000 கோடி செலவு பண்ணாருனு நானும் ஏஐ வீடியோ வெளியிடுகிறேன்... பார்க்கிறீர்களா? என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பதிலளித்துள்ளார். சென்னை, அயனாவரம், வில்லிவாக்கம் தொகுதிக்குள்பட்ட அயனாவரம் சமூக நல மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கலந்துகொண்டு, பிறந்த குழந்தைகளுக்கு 'தாய்மாமன் தங்க மோதிரம்'திட்டத்தின் கீழ் தங்க மோதிரங்களை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து, அங்குள்ள சென்னை மேல்நிலைப்பள்ளிக்குச் சென்ற அமைச்சர் பள்ளியின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். பின்னர் மாணவர்களுடன் கலந்துரையாடியதுடன், அவர்களுடன் கைப்பந்து விளையாடினார். பின்னர், செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவிடம், கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவு செய்தேன் என்று தவெக வேட்பாளர் சத்தியபாமா பேசியதாக காணொலி குரல் பதிவு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "அது செய்யறிவு(ஏஐ) வீடியோ தான். ஸ்டாலின் சார் ரூ.1,000 கோடி செலவு பண்ணாருனு நானும் நாளை காலை ஏஐ வீடியோ வெளியிடுகிறேன்... பார்க்கிறீர்களா?. திமுக காலை பத்து மணிக்கு ரீல்ஸ் போடு ம்போதே தெரியலையா எனத் தெரிவித்தார். அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவின் இந்த பதில் செய்தியாளர்கள் மத்தியில் கவனம் பெற்றது.

## சார் ஆட்சியர் அலுவலகம், சிவகாசி

ந.க.எண் ஆ2/7901/26 நாள் 21/07/2026

ரா.கருப்பையா, 1/97 வடக்கு தெரு, புதுக்கோட்டை, சிவகாசி வட்டம் ––மனுதாரர்

/எதிர்/

வருவாய் வட்டாட்சியர் அவர்கள், சிவகாசி வட்டம்.

–––எதிர்மனுதாரர்

மேற்படி மனுதாரர் மகன் க.கார்த்தீஸ்வரன் என்பவர் கடந்த 16.12.2011 –ம் தேதியன்று விழுப்பனூர் பஞ்சாயத்து, கிருஷ்ணன்கோவில், ஸ்ரீகிருஷ்ணா மருத்துவமனையில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி மேற்படி உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து அம்மனு மீதான விசாரணை ஏற்பட்டுள்ளது. இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், விளம்பரம் நாளிதழில் வெளியான 15 தினங்களுக்குள் மேற்படி உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மனு ஒரு தலை பட்சமாகத் தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மனுதாரர்**
**ரா.கருப்பையா**




## கால் சோர்வுக்கு எளிய ஓய்வு!



நாள் முழுவதும் ஏற்பட்ட கால் சோர்வுக்கு, தூங்கும்முன் வெதுவெதுப்பான நீரில் கால்களை ஊறவைப்பது தற்காலிக நிவாரணம் அளிக்கலாம்.

ஒரு பாத்திரம் நீரில் தலா ஒரு டேபிள்ஸ்பூன் எப்சம் உப்பு, ஆப்பிள் சைடர் வினிகர், சிறிது ரோஸ்மேரி இலைகள், ஒரு டீஸ்பூன் இஞ்சி சேர்க்கப்படுகிறது. கால்களை 1520 நிமிடங்கள் ஊறவைத்தபின் மெதுவாக மசாஜ் செய்யலாம். தண்ணீர் அதிகச் சூடாக இருக்கக்கூடாது. சருமத்தில் வெடிப்பு, வறட்சி அல்லது எரிச்சல் இருந்தால் கவனம் தேவை. இந்த முறையால் உடலின் நச்சுக்கள் வெளியேறும் என்பதற்கு வலுவான அறிவியல் ஆதாரம் இல்லை. இது ஓய்வுக்கான வழியே தவிர, கால் வலிக்கான சிகிச்சை அல்ல. நல்ல தூக்கம், சீரான உணவு, போதுமான தண்ணீர், உடற்பயிற்சி ஆகியவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அமைதியான சூழலில் ஆழமாக மூச்சுவிட்டு ஓய்வெடுப்பதும் இதுபான உணர்வை ஏற்படுத்த உதவலாம்; கூடுதல் பொருட்களைச் சேர்ப்பது அவசியமில்லை. அதிகமாகத் தேய்ப்பதைத் தவிர்க்கவும்.

# தமிழக அமைச்சரவையில் மாற்றமா?



சென்னை, அக். 07–

தமிழக அமைச்சரவை அடுத்த வாரம் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

தமிழ்நாட்டில் நிகழாண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் தனிப்பெரும் கட்சியாக காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள், ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்தது. கட்சி ஆரம்பித்து போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்ற விஜய், முதல்வராக கடந்த மே 10 ஆம் தேதி பொறுப்பேற்றார்.

ஆதரவளித்த காங்கிரஸுக்கு இரண்டு அமைச்சர்கள், விசிக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலா ஒரு அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. ஆனால், இடதுசாரிகள் அமைச்சரவையில் இடத்தை மறுத்துவிட்டு வெளியிலிருந்து ஆதரவு மட்டும் கொடுப்பதாகத் தெரிவித்தன. தமிழ்நாடு முதல்வராகப் பதவியேற்ற போது ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கீர்த்தனா (ஒரு பெண் அமைச்சர்) உள்பட 9 அமைச்சர்கள் பதவியேற்றனர். அதன்பின்னர், மே 21 ஆம் தேதி நடைபெற்ற அமைச்சரவை விரிவாக்கத்தில் 7 பட்டியலின எம். எல்.ஏ.க்கள், கீர்த்தனா (தொழில்துறை), எஸ். கமலி (கால்நடைத்துறை), சி. விஜயலட்சுமி (பால்வளத்துறை), கே. ஜெகதீஸ்வரி (சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை) உள்ளிட்ட நான்கு பெண் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு அமைச்சரவை வாய்ப்பு வழங்கப்பட்டது.

முதல்வராக விஜய் பதவியேற்று 150 நாள்கள் கடந்துள்ள நிலையில், அவர் பிரிட்டன் சென்று வந்த பின் அமைச்சரவையில் மாற்றம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில், தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம் குறித்த அறிவிப்புகள் அடுத்த வாரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அமைச்சரவை மாற்றத்தில் ஒரு பெண் அமைச்சர் உள்பட மூன்று பேர் நீக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன் அடிப்படையில், தமிழக அமைச்சரவையில் சில மாற்றங்களை செய்ய, முதல்வர் விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. சில அமைச்சர்களின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை. இதை, துறை செயலர்கள் வாயிலாக முதல்வர் விஜய் தெரிந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. தென்மாவட்டத்தைச் சேர்ந்த பெண் அமைச்சரின் செயல்பாடுகளில் முதல்வர் விஜய்க்கு திருப்தியில்லை என்றும் கூறப்படுகிறது. தாராபுரம், மதுராந்தகம் இடைத்தேர்தல் முடிவுகள் அக். 9 ஆம் தேதி வெளியாகவிருக்கின்றன. மேலும், அதைத்தொடர்ந்து வடபழனி மெட்ரோ திறப்பு விழாவிற்காக பிரதமர் நரேந்திர மோடி வருகையைத் தொடர்ந்து அமைச்சரவை மாற்றம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதுராந்தகம், தாராபுரம் உள்ளிட்ட இடைத்தேர்தல்களுக்குப் பிறகு, தவெக அரசுக்கு ஆதரவளிக்கும் கட்சிகள் மற்றும் புதிய கூட்டணி அடிப்படையில் அமைச்சரவையில் மாற்றங்கள் இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# வேலை வாய்ப்பு

## சென்னை சிஎஸ்ஆர்ஐஎல் 9 பணியிடங்கள்!

மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (CSIRCLRI), திட்ட உதவியாளர், திட்ட இணை ஆராய்ச்சியாளர் என 9 ஒப்பந்தப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடம்: சென்னை

எழுத்துத் தேர்வு: 27.10.2026

நேர்முகத் தேர்வு: 28, 29.10.2026

விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

இணையதளம்: www.clri.org

தகுதி மற்றும் விண்ணப்ப விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

தூத்துக்குடியில் 22 ஒருங்கிணைப்பாளர் பணிகள்!

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தூத்துக்குடி மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் 22 வட்டார ஒருங்கிணைப்பாளர் ஒப்பந்தப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடம்: தூத்துக்குடி

விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

கடைசி நாள்: 16.10.2026

இணையதளம்: thoothukudi.nic.in

தகுதி, விண்ணப்பப் படிவம் மற்றும் அனுப்ப வேண்டிய முகவரியை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

## தஞ்சை பண்பாட்டு மையத்தில் 25 பணியிடங்கள்!

தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தில் (SZCC), குரூப் A, B (அரசிதழ் பதிவு பெறாதவை), C பிரிவுகளில் 25 நிரந்தரப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடம்: தஞ்சாவூர்

விண்ணப்ப முறை: ஆஃப்லைன்

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: 03.11.2026

இணையதளம்: szccindia.org

தகுதி, வயது வரம்பு, விண்ணப்பப் படிவம், அனுப்ப வேண்டிய முகவரியை அறிவிப்பில் பார்க்கவும்.

## ஐடிபிபியில் 37 தலைமைக் காவலர் பணிகள்!

இந்தோதிபெத்திய எல்லைக் காவல் படையில் மோட்டார் மெக்கானிக் பிரிவில் 21, கல்வி மற்றும் மனஅழுத்த ஆலோசகர் பிரிவில் 16 என மொத்தம் 37 நிரந்தரத் தலைமைக் காவலர் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்ப முறை: ஆன்லைன்

கடைசி நாள்: 27.10.2026, இரவு 11.59 மணி

இணையதளம்: recruitment.itbpolice.nic.in

தகுதி, வயது வரம்பு மற்றும் தேர்வு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

## சிபிஆர்ஐ நிறுவனத்தில் 110 பணியிடங்கள்!

மத்திய மின்சக்தி ஆராய்ச்சி நிறுவனத்தில் (CPRI), 110 நிரந்தரப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணிகள்: பொறியியல் அதிகாரி, பொறியியல் உதவியாளர், அறிவியல் உதவியாளர், தொழில்நுட்பப் பணியாளர், தொழில்நுட்ப உதவியாளர், உதவியாளர், பல்பணி ஊழியர் (காவல் மற்றும் கண்காணிப்பு).

பணியிடங்கள்: பெங்களூரு, போபால், ஹைதராபாத், நாக்பூர், நாசிக், நொய்டா, கொல்கத்தா, குவஹாட்டி மற்றும் ராய்ப்பூர்.

அறிவிப்பு எண்: CPRI/06/2026

விண்ணப்ப முறை: ஆன்லைன்

கடைசி நாள்: 12.10.2026

இணையதளம்: cpri.res.in

கல்வித்தகுதி, வயது வரம்பு, கட்டணம் உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

## எஸ்டிபிஐ நிறுவனத்தில் 10 பணியிடங்கள்!

இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்களில் (STPI), அலுவலகப் பணியாளர், உதவியாளர், நிர்வாக அதிகாரி, தொழில்நுட்ப உதவிப் பணியாளர் என 10 நிரந்தரப் பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பணியிடம்: நொய்டா, ஹைதராபாத், பெங்களூரு, புதுதில்லி, இந்தூர் (போபால்), குவஹாட்டி.

விண்ணப்ப முறை: ஆன்லைன்

கடைசி நாள்: 12.10.2026

இணையதளம்: www.stpi.in

தகுதி உள்ளிட்ட விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்க்கவும்.

# தங்கம் விலை உயர்வு!



சென்னை, அக். 07–

வாரத்தின் தொடக்க நாளான திங்கள்கிழமை விலை மாற்றமின்றி சவரன் ரூ. 1,09,400–க்கு விற்பனையானது. செவ்வாய்க்கிழமை சவரனுக்கு ரூ. 120 குறைந்த நிலையில் தங்கம் விலை உயர்ந்துள்ளது. ஆபரணத் தங்கத்தின் விலை (அக். 7, புதன்கிழமை) சவரனுக்கு ரூ. 400 உயர்ந்து ரூ. 1,09,680 –க்கும் கிராமுக்கு ரூ. 50 உயர்ந்து ரூ. 13,710 –க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலை மாற்றமின்றி கிராம் ரூ. 245–க்கும், ஒரு கிலோ (கட்டி வெள்ளி) ரூ.2 .45 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

# ஃப்ளைதுபை கேப்டன் ஸ்மித் மச்சாருக்கு தலையில் எலும்பு முறிவு!



துபை, அக். 07–

துபையில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகருக்கு கடந்த புதன்கிழமை புறப்பட்ட ஃப்ளைதுபை விமானத்தில் இந்திய விமானி ஸ்மித் மச்சாரை கத்தியால் குத்திய துணை விமானியான ஓமனைச் சேர்ந்த ஹமாம் அல்–ஹம்மாமி, விமானத்தை விபத்துக்குள்ளாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

படுகாயங்களுடன் எதிர்த்துப் போராடிய மச்சார், சக பயணிகள் – ஊழியர்கள் உதவியுடன் அந்த முயற்சியை முறியடித்து, விமானத்தில் பயணித்த இரு விமானிகளின் உதவியுடன் சௌதி அரேபியாவில், 150 பயணிகளுடன் சென்ற விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார். இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த மச்சாருக்கு சௌதி அரேபியா மருத்துவமனையில் முதற்கட்ட சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, மருத்துவ கண்காணிப்பில் உள்ளார். இந்த நிலையில், விமானத்தில் நடந்த சம்பவத்தில் மச்சாரின் தலையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்காக, ஐக்கிய அரபு அமீரக மருத்துவமனைக்கு மச்சாரை மாற்றுவதற்கு முன்னதாகவே, சௌதி அரேபியா மருத்துவமனையில் அவருக்கு அவசர அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது தற்போது தெரியவந்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: "கேப்டன் ஸ்மித் மிச்சார் உடல்நலம் தேறி வருகிறார். அவரது குடும்பத்தினர், மருத்துவர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளுடன் தூதரகம் தொடர்பில் உள்ளது. அவருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் தூதரகம் வழங்கி வருகிறது" எனக் குறிப்பிட்டுள்ளது.




## ரஜினி ரசிகர்களுக்குச் சிறப்பு நிகழ்ச்சி!



ரஜினிகாந்த்நெல்சன் கூட்டணியில் உருவாகியுள்ள 'ஜெயிலர் 2' படக்குழுவின் சிறப்பு உரையாடல் நிகழ்ச்சி அக்டோபர் 9ஆம் தேதி சன் நெக்ஸ்ட் ஓடிடி தளத்தில் வெளியாகிறது.

பெரிய அளவில் இசை வெளியீட்டு விழா நடைபெறாத நிலையில், ரசிகர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்ச்சியில் ரஜினியின் பேச்சுடன் நெல்சன், ரம்யா கிருஷ்ணன், எஸ்.ஜே.சூர்யா உள்ளிட்டோரின் கலந்துரையாடலும் இடம்பெறுகிறது.

சன் பிக்சர்ஸ் தயாரிப்பில், அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தில் மோகன்லால், சிவராஜ்குமார், மிதுன் சக்கரவர்த்தி, விஜய் சேதுபதி, வித்யா பாலன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். படத்தின் பாடல்களும் டிரெய்லரும் ஏற்கெனவே வெளியாகியுள்ள நிலையில், இந்தச் சிறப்பு நிகழ்ச்சி ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தயாரிப்பாளரானார் சிபிராஜ்!



நடிகர் சிபிராஜ் 'அண்டர்டாக் ஃபிலிம்ஸ்' என்ற தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். அதன் முதல் படத்தில் அவரே கதாநாயகனாக நடிக்கிறார்.

'பென்குயின்', 'ஜீப்ரா' படங்களை இயக்கிய ஈஸ்வர் கார்த்திக் இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. பெயரிடப்படாத இந்தப் படம் தற்காலிகமாக 'ப்ரொடக்ஷன் நம்பர் 1' என அழைக்கப்படுகிறது.

கதை, பிற நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை. படத்தின் தலைப்பும் படக்குழு விவரங்களும் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவுள்ளன.

# அரசியல் களத்தில் தனுஷ்...!



சென்னை, அக். 07–

நடிகர் தனுஷ் தன்னுடைய கட்சியின் பெயரை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து விட்டதாகவும் இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் சினிமாவின் தவிர்க்க முடியாத முன்னணி நட்சத்திரமான விஜய், சினிமா வாழ்க்கையை விட்டு விட்டு கடந்த 2024 ஆம் ஆண்டு 'தமிழக வெற்றிக் கழகம்' என்ற கட்சியை தொடங்கினார். உள்ளாட்சித் தேர்தல், இடைத்தேர்தல், மக்களவைத் தேர்தலைப் புறக்கணித்த தவெக, நேரடியாக 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் களமிறங்கி 108 இடங்களில் மிகப்பெரிய வெற்றி பெற்றது. முதல் தேர்தலிலேயே முதல்வரான விஜய் பெருமையையும் விஜய் பெற்றார். விஜய்யின் மிகப் பெரிய வெற்றி, மற்ற சினிமா நட்சத்திரங்களையும் அரசியல் பக்கம் இழுக்க ஆரம்பித்திருக்கிறது. முன்னணி நட்சத்திரங்களில் விஜய் சினிமாவிலிருந்து விலகி விட்ட நிலையில், அஜித்துடம் கார் பந்தயமென்று ஒதுங்கி விட்டார். இதனால், சூர்யா, தனுஷ், சிவகார்த்திகேயன், விஜய் சேதுபதி ஆகியோர் முன்னணி நட்சத்திரங்களாக முன்னேறியிருக்கும் சூழலில் இவர்களும் அரசியலுக்கு வரப்போவதாக அவ்வப்போது பேச்சுகள் வெளிவருகின்றன.

அதிலும் குறிப்பாக தனுஷ் மீது அனைவரது கவனமும் இருந்து வந்தது. காரணம், முன்னணி நடிகராக திரைப்பயணத்தில் வேகம் காட்டி வரும் அவர், மறுபுறம் தனது ரசிகர் நற்பணி மன்றத்தையும் ஒரு சேர வலுப்படுத்தி வருகிறார்.

சமீபத்தில் தனது ரசிகர் மன்றத்தை மாவட்ட ரீதியாக பிரித்து மாவட்ட தலைவர்களை தனுஷ் நியமித்திருந்தார்.

தொகுதி வாரியா கவும் மன்றத்துக்கு உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வந்தது.

இந்த நிலையில், நடிகர் தனுஷ் தலைமைத் தேர்தல் ஆணையத்தில் தன்னுடைய கட்சியின் பெயரைப் பதிவு செய்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அதன்படி தனது கட்சிக்கு 'தமிழக எழுச்சிக் கழகம்' என்று தனுஷ் பெயர் சூட்டியுள்ளாராம்.

சட்டப்பேரவை தேர்தல் வெற்றிக்கு பிறகு முதல்வர் விஜய்யை நடிகரும் எம்பியுமான கமல்ஹாசன், சிவ கார்த்திகேயன், சிலம்பரசன் உள்ளிட்ட பல வேறு சினிமா பிரபலங்கள் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். ஆனால், ரஜினியோ, தனுஷோ முதல்வர் விஜய்யை சந்திக்கவில்லை; வாழ்த்தும் தெரிவிக்கவில்லை.

அதே நேரத்தில், முதல்வர் விஜய்யின் வருகை தனுஷின் சினிமா வாழ்க்கையில் பல்வேறு பின்னடைவுகளையும் ஏற்படுத்தியது. 'இட்லி கடை' பட வெளியீட்டின் போது கரூர் நெரிசல் சம்பவம் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளில் இருந்த இழுபறியால் 'கர' படத்தின் வசூல் பெரியளவில் பாதிக்கப்பட்டது.

இதனால், முதல்வர் விஜய்க்கு எதிரான தனுஷின் நிலைப்பாடுகள் மற்றும் அரசியல் போக்கு இருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகின. விரைவில் பொதுவெளியில் தனது அரசியல் நிலைப்பாட்டை தனுஷ் அறிவிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது. கட்சியின் கொடி, கொள்கைகள், கோட்பாடுகள் உள்ளிட்டவைகளும் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசியலிலிருந்து பின்வாங்கிய உச்ச நட்சத்திரம் ரஜினியின் ஆதரவுடன் தனுஷ் நேரடியாக 2031 சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிட முடிவு செய்துள்ளதாகவும் விவர மறிந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை

ரெகுலர் சர்வீஸ்

பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை

Ph: 98659 88881

# ராகுலின் போராட்டப் பங்கேற்பு குறித்து விமர்சனம்!




புதுடெல்லி, அக். 07–

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி ஜூலை மாதம் தில்லியில் நடைபெற்ற போராட்டத்தில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ராஜினாமாவை வலியுறுத்தும் போராட்டத்திலும் ராகுல் காந்தி பங்கேற்றது குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிற கட்சிகள் முன்னெடுக்கும் போராட்டங்களில் காங்கிரஸ் தலைமை இணைவது, அதன் தனித்த அரசியல் நடவடிக்கைகள் குறித்த கேள்வியை எழுப்புவதாக வழங்கப்பட்ட கட்டுரை விமர்சிக்கிறது. காங்கிரஸ் தனது அடுத்த போராட்டத்தைத் தானே திட்டமிடுகிறதா என்ற கேள்வியும் அதில் எழுப்பப்பட்டுள்ளது. எனினும், தொண்டர்களின் அதிருப்தி மற்றும் பிற கட்சியினரின் கருத்துகளுக்கு ஆதாரமோ, பெயருடன் கூடிய மேற்கோள்களோ வழங்கப்படவில்லை.






## இன்றைய கார்ட்டூன்




## மாத்திரை கவர்களில் இந்தி எழுத்து வந்தது எப்படி? - அமைச்சர் அருண்ராஜ்!

சென்னை, அக். 07–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:– எதற்கெடுத்தாலும் மொழியை வைத்து மலிவான அரசியல் பிழைப்பு நடத்தும் திமுகவினர், தற்போது கரூர் மற்றும் கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாத்திரை உறைகளைக் கையில் எடுத்து, தாங்கள் செய்த வரலாற்றுப் பிழையை மறைத்து இல்லாத ஒன்றை இருப்பதாகக் காட்டி முதலைக் கண்ணீர் வடிப்பதற்கு எங்கள் கடும் கண்டனங்கள்.

உண்மையை அடியோடு மறைத்து, மக்கள் மத்தியில் திட்டமிட்டுப் பொய்க் குழப்பத்தை ஏற்படுத்தத் துடிக்கும் திமுகவினருக்கும், தமிழக மக்களுக்கும் இந்த விவகாரத்தின் அப்பட்டமான உண்மை நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாத்திரை கவர்கள் பொதுவாக மத்திய சிறையில் இருந்து பெறப்பட்டு, அதில் 'காலை / மதியம் / இரவு' போன்ற குறிப்புகள் தமிழ்




மொழியில் மட்டுமே முத்திரையிடப்பட்டு (Seal) வழங்கப்படுவது வழக்கம்.

கடந்த டிசம்பர் 2025–ல், மத்திய சிறையிலிருந்து வரும் கவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கம் மூலம் 4 லட்சம் கவர்கள் அச்சிட கடந்த திமுக ஆட்சியில் டிசம்பர் 31, 2025 அன்று அவசர ஆணை வழங்கப்பட்டு, அந்த கவர்கள் 2026 ஜனவரி மாதத்திலேயே (திமுக ஆட்சிக் காலத்திலேயே) மக்களிடம் புழக்கத்திற்கு வந்துவிட்டன.

அதேபோல் கோவையில் சரியாக மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அதாவது திமுக ஆட்சியில்தான் அலுவலக நடைமுறையால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டு, சிந்தாமணி கூட்டுறவு நிறுவனம் மூலம் அச்சிடப்பட்டு நடைமுறைக்கே கொண்டு வரப்பட்டது! தங்கள் ஆட்சியிலேயே இந்தியை அனுமதித்து, அதற்கான வார்ப்புருவை (Template) உருவாக்கி, நோயாளிகளிடமும் புழக்கத்திற்கு விட்டுவிட்டு, இப்போது ஆளுங்கட்சி மீது பழிபோடுவது எந்த வகையிலான அரசியல்?

தங்கள் ஆட்சியிலேயே இவை புழக்கத்திற்கு வந்தபோது வாய்மூடி, கைகட்டி மௌனியாக இருந்த திமுகவினர், இப்போது திடீரென மொழிப்போர் காவலர்கள் போல் வேடம் போடுவது ஏன்? தாங்களே இந்தியைத் திணித்துவிட்டு, இப்போது அதனை ஒரு பூதாகரமான பிரச்சனையாக மாற்றி அரசியல் குளிர்காய நினைப்பது திமுகவின் அப்பட்டமான பித்தலாட்டம்!

தற்போதைய நிர்வாகம், கிடங்கில் உள்ள தேவையின் அடிப்படையில் மட்டுமே கவர்களைக் கொள்முதல் செய்ததே தவிர, திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அந்தவடிவமைப்பிலோ அல்லது மொழியிலோ எந்த மாற்றமும் செய்யவில்லை. தாங்கள் செய்த துரோகத்தை மறைக்க, எங்கள் மீது அபாண்டமாகப் பழிபோடும் திமுகவின் கேவலமான அரசியல் தந்திரம் இது!

## மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு 5 அடுக்கு பலத்த பாதுகாப்பு!

சென்னை, அக். 07–

தமிழகத்தில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய சட்டசபை தொகுதிகளுக்கு நேற்று இடைத்தேர்தல் நடந்தது. மதுராந்தகம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல், தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன், அ.தி.மு.க. வேட்பாளர் கனிதா சம்பத், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு வேட்பாளர் சுகந்தி, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் ஜானகிராமன் மற்றும் சுயேச்சைகள் என மொத்தம் 27 பேர் போட்டியிட்டனர்.

தாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா, தி.மு.க. வேட்பாளர் சுகன்யா, அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி, இந்திய கம்யூனிஸ்டு வேட்பாளர் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகா மற்றும் சுயேட்சைகள் என மொத்தம் 22 பேர் போட்டியிட்டனர். இதனால் இந்த தேர்தலில் 5 முனைப்போட்டி ஏற்பட்டது.

2 தொகுதிகளிலும் நேற்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. மதுராந்தகம் தொகுதியில் 285 வாக்குச்சாவடிகளும், தாராபுரம் தொகுதியில் 320 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டு இருந்தன. காலை முதலே வாக்காளர்கள் வந்து தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர். முதல் முறை வாக்காளர்களும் ஏராளமானோர் ஓட்டு போட்டனர். 2 தொகுதிகளிலும் தேர்தல் அமைதியாக நடந்து முடிந்தது.

### வாக்குப்பதிவு சதவீதம்

மதுராந்தகம் தொகுதியில் 1 லட்சத்து 4 ஆயிரத்து 926 ஆண் வாக்காளர்கள், 1 லட்சத்து 8 ஆயிரத்து 797 பெண் வாக்காளர்கள், மூன்றாம் பாலினத்தவர் 65 பேர் என மொத்தம் 2 லட்சத்து 13 ஆயிரத்து 788 வாக்காளர்கள் உள்ளனர். நேற்று நடந்த இடைத்தேர்தலில் 91 ஆயிரத்து 131 ஆண் வாக்காளர்களும், 93 ஆயிரத்து 258 பெண் வாக்காளர்களும், மூன்றாம் பாலினத்தவர் 34 பேரும் என மொத்தம் 1 லட்சத்து 84 ஆயிரத்து 423 பேர் வாக்களித்து இருந்தனர். மொத்தம் 86.26 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. கடந்த



ஏப்ரல் மாதம் நடைபெற்ற சட்டமன்ற பொதுத் தேர்தலை விட 7.1 சதவீதம் வாக்குகள் குறைவாக பதிவாகி இருந்தன. தாராபுரம் தொகுதியில் 80.31 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. மொத்தம் 1,79,337 பேர் வாக்களித்து இருந்தனர். கடந்த தேர்தலை விட 9.61 சதவீத வாக்குகள் குறைவாக பதிவாகி இருந்தன. நேற்று மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடைந்தது.

### சீல் வைப்பு

மதுராந்தகம் தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்ததும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் முகவர்கள் முன்னிலையில் அனைத்து மின்னணு எந்திரங்களும் சீல் வைக்கப்பட்டன. பின்னர் மின்னணு எந்திரங்கள் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் வேனில் வாக்கு எண்ணும் மையமான செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் உள்ள சமூக மேம்பாட்டுக்காக ஒருங்கிணைந்த பயிற்சி மையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள அறையில் வைக்கப்பட்டு உள்ளது.

மின்னணு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணும் மையத்தில் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

### தாராபுரம்

தாராபுரம் தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்ததும், அனைத்து மையங்களிலும் வாக்குப்பதிவு எந்திரங்கள், அலுவலர்களால் சீல் வைக்கப்பட்டன. தொடர்ந்து பலத்த போலீஸ் பாதுகாப்புடன், தாராபுரத்தில் இருந்து வாக்கு எண்ணும் மையமான திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகில் உள்ள எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டன.

மாவட்ட கலெக்டரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான மனீஷ் வாக்கு எண்ணும் மையத்திற்கு நேரில் வந்து, வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்த்தார். அதன்பின் லாரிகளில் இருந்த எந்திரங்கள் பாதுகாப்பாக வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள அறைக்கு கொண்டு செல்லப்பட்டு பூட்டி சீல் வைக்கப்பட்டன.

### பாதுகாப்பு

எல்.ஆர்.ஜி கல்லூரியில் 200–க்கும் மேற்பட்ட போலீசார் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் மத்திய துணை ராணுவப்படை, ஆயுதப்படை, உள்ளூர் போலீசார் என 3 அடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஸ்ட்ராங் ரூம், வாக்கு எண்ணும் மையம் மற்றும் கல்லூரி வளாகத்தை சுற்றி மொத்தம் 64 சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்தப்பட்டு தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் 5 கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வெடிகுண்டு செயலிழப்பு பிரிவினர் மற்றும் தீயணைப்பு துறையினர் தீயணைப்பு வாகனங்களுடன் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளனர். வாக்கு எண்ணிக்கை முடிவடையும் வரை இந்த தொடர் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அமலில் இருக்கும்.

### வாக்கு எண்ணிக்கை

அக். 9 காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்குகிறது. 14 மேஜைகள் போடப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது. வாக்கு எண்ணிக்கை முழுவதும் சி.சி.டி.வி. கேமரா மூலம் முழுமையாக கண்காணிக்கப்பட உள்ளது. அன்று காலை 11 மணியளவில் வெற்றி நிலவரம் தெரிய வரும்.

## அபிஷேகம் பார்க்கும் பக்தர்களுக்கு மருத்துவ பரிசோதனை கட்டாயம்..!

திருவண்ணாமலை, அக். 07–

கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சிவாச்சாரியார்கள் மற்றும் கோவில் பணியாளர்களுடனான ஆலோசனை கூட்டம் கோவில் உள்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. உதவி ஆணையர் பாலசுப்பிரமணி, மேலாளர் செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அப்போது அவர் பேசியதாவது:–

கடந்த சில நாட்களாக சாமி மற்றும் அம்மன் சன்னதிகளில் மூலவர் அபிஷேகத்தை காண்பதற்காக பக்தர்கள் 'ஆன்லைன்' மூலமாகவும், 'ஆப் லைன்' மூலமாகவும் பதிவு செய்து கருவறைக்குள் சென்று அபிஷேகத்தை பார்க்கிறார்கள். அப்போது சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவது போன்ற சம்பவங்கள் நடைபெறுகிறது.

இதனை தடுக்கும் வகையில் வரும் வாரங்களில் இருந்து சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூலவர் அபிஷேகத்திற்கு பக்தர்களுக்கு அனுமதி கிடையாது. வழக்கம்போல் சாமிக்கும், அம்மனுக்கும் அபிஷேகம் நடைபெறும். ஆன்லைன் புக்கிங்



கிடையாது. மற்ற நாட்களில் அபிஷேகத்திற்கு முன்பதிவு செய்து வரும் பக்தர்கள் விருப்பம் இருந்தால் ஒரு மணி நேரத்திற்கு முன்பு கோவிலுக்குள் வந்து கோவிலில் உள்ள மருத்துவ முகாமில் உடற்தகுதி பரிசோதனை செய்து கொள்ளலாம்.

இந்த நடைமுறை அக். 07 முதல் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் கருவறையில் அமர்ந்து சாமி, அம்மன் அபிஷேகத்தை காணக்கூடிய பக்தர்களுக்கு ஓ.ஆர்.எஸ். கரைசல் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வயது முதிர்ந்தவர்களை அபிஷேகத்தில் கடைசியாக தான் அமர வைக்க வேண்டும். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள், விடுமுறை நாட்கள், பண்டிகை காலங்களில் பக்தர்கள் விரைந்து சாமி தரிசனம் செய்ய கோவில் பணியாளர்களுடன் சிவாச்சாரியார்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## 15-ம் தேதி 'வீ த லீடர்ஸ்' அமைப்பு சார்பில் அரசியல் மையம் தொடக்கம்!

சென்னை. அக். 07–

அண்ணாமலை தொடங்கியுள்ள 'வீ தி லீடர்ஸ்' அமைப்பு சார்பில், கோவையில் அமைக்கப்பட்டுள்ள அப்துல் கலாம் நெறிமுறை மற்றும் அரசியல் மையம் வரும் 15ம் தேதி திறந்து வைக்கப்பட உள்ளது. பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, ஜூன் 5 ஆம் தேதி அக்கட்சியிலிருந்து விலகி 'வி த லீடர்ஸ்' என்ற அரசியல் இயக்கத்தை தொடங்கினார். முதலில் இயக்கமாக தொடங்கி, விரைவில் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்படும் என்றும், வருகின்ற மக்களவைத் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் அறிவித்தார்.

இந்நிலையில் கோவையை மையமாக



கொண்டு கொங்கு மண்டலத்தில் தன் அமைப்பை பலப்படுத்தி வரும் அவர் கோவையில், நீலாம்பூர் பகுதியில் 'டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் நெறிமுறை மற்றும் அரசியல் மையம்' கட்டி வருகிறார். இந்த மையத்தின் வாயிலாக, 'வீதலீடர்ஸ்' அமைப்பினருக்கு திறன் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இது குறித்து, அந்த அமைப்பின் சமூக ஊடக பிரிவு பொதுச்செயலர் அஸ்பயர் சுவாமிநாதன் கூறுகையில், "அரசியலமைப்பு, ஜனநாயகம், ஆட்சி நிர்வாகம், உள்ளாட்சி, தலைமை பண்பு குறித்து, அமைப்பின் உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். பொது இயக்கம் என்பது, தேர்தல் அரசியலுடன் முடிவதில்லை. பொதுப்பிரச்னைகளை அடையாளம் கண்டு, மக்களை ஒருங்கிணைத்து, தீர்வு காண வேண்டும். அதற்காக தான், இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது. வரும் 15ம் தேதி, இந்த மையத்தை, அண்ணாமலை தொடங்கி வைக்கிறார். முதல் கட்டமாக, 100 பேருக்கு இரண்டு நாள் பயிற்சியும், பின், அவர்களுக்கு 100 நாள் களப்பயிற்சியும் வழங்கப்படும்" என்று அவர் கூறினார்.

## குற்றாலம் மெயின் அருவிக்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை!

தென்காசி, அக். 07–

குற்றாலம் மெயின் அருவியில் பராமரிப்பு பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டதால், அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டது. குற்றாலம் மெயின் அருவியில் கடந்த ஆண்டு பராமரிப்பு பணிகள் நடைபெற்றன. அப்போது மெயின் அருவியில் இருந்த பழைய ஆர்ச் அகற்றப்பட்டு, சற்று இடைவெளியில் புதியதாக பெரிய வளைவு கட்டப்பட்டது. தரைத்த ளத்திலும் கற்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்றன. இந்த பணிகள் நிறைவடைவதற்குள் குற்றாலத்தில் சீசன் தொடங்கியதால், சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர். தற்போது அருவியில் நீர்வரத்து குறைந்ததால், பராமரிப்பு பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. வெள்ளத்திலும் சேதமடையாதவாறு ராட்சத



கற்கள் பதிக்கப்படுகின்றன. மெயின் அருவியில் ஆண்கள் குளிக்கும் பகுதியில் மட்டும் லேசாக தண்ணீர் விழுகிறது. அதனை திருப்பி விட்டு, அங்கு தரைத் தள கற்கள் பதிக்கப்படுகின்றன. இதையொட்டி மெயின் அருவி மூடப்பட்டதாக அறிவிக்கப்ப ட்டு, அங்கு சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டு உள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்குள் பராமரிப்பு பணிகளை விரைவில் நிறைவு செய்தவுடன் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பிரான்சிஸ் ஹால்சனுக்கு இயற்பியல் நோபல்!



வாஷிங்டன், அக். 07–

அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் ஹால்சனுக்கு 2026–ஆம் ஆண்டுக்கான இயற்பியல் நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது. ஐஸ்கியூப் நியூட்ரினோ ஆய்வகம் மற்றும் விண்வெளியிலிருந்து வரும் உயர் ஆற்றல் நியூட்ரினோக்களைக் கண்டறிவதில் ஆற்றிய பங்களிப்புக்காக அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி பேரண்டத்தின் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

## தீபாவளி பண்டிகை எதிரொலி... சமையல் எண்ணெய் விலை அதிகரிப்பு!

சென்னை, அக். 07–

சேலம் மாவட்ட தாவர எண்ணெய் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரதாசன் கூறியதாவது: தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆர்டர்கள் அதிகரித்துள்ளதால், சமையல் எண்ணெய் விற்பனையும் உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக கடந்த மாதத்தை ஒப்பிடும்போது, ஒரு லிட்டர் எண்ணெய் விலை ரூ.10 முதல் ரூ.20 வரை மட்டுமே அதிகரித்துள்ளது.

இந்தியாவின் சமையல் எண்ணெய் தேவையில் சுமார் 60 சதவீதம் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது. சர்வதேச போர் மற்றும் பருவநிலை மாற்றம் போன்ற காரணிகளால் பாதிப்புகள் இருந்தாலும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. இதற்கிடையே, கடந்த செப்டம்பர் 24–ந் தேதி மத்திய அரசு சமையல் எண்ணெய் இறக்குமதி வரியை குறைத்தது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020